மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள பாலப் பணி தற்போது திட்ட மதிப்பீடு தயாரிக்கும் நிலையில்தான் இருக்கிறது. அந்தப் பணிகள் முடிந்தவுடன், ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, விரைவில் பாலப் பணிகள் துவக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 328, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

328—

கடலரிப்பு தடுப்புச் சுவர்

7939*—திரு. சு. பவுன்ராஜ்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதியிலுள்ள மீனவக் கிராமங்களில் கடலரிப்பு தடுப்புச் சுவர் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பூம்புகார் தொகுதியில் சுனாமி போன்ற கடல் சீற்றத்திலிருந்து மீனவக் கிராமங்களைக் காப்பாற்ற தடுப்புச் சுவர் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்ற கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ளார். குறிப்பறிந்து செயல்படுகின்ற மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணத்தில் இந்தப் பணி தோன்றியபோதே அதைச் செய்து முடிக்கின்ற பேராற்றல் படைத்துள்ள மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, (மேசையைத் தட்டும் ஒலி) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், பூம்புகார் தொகுதி, வானகிரி குப்பத்தில் கடல் சீற்றத்திலிருந்து மீனவக் கிராமங்களைக் காப்பாற்ற

2013 ஏப்ரல் 26]

2 பகுதிகளிலும் முறையே 950 மீட்டர் நீளத்திற்குத் தடுப்புச் சுவர் மற்றும் குறுக்குச் சுவர் ரூ.16 கோடியே 98 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் 500 மீட்டர் நீளத்திற்குத் தடுப்புச் சுவர் மற்றும் குறுக்குச் சுவர் ரூ.16 கோடியே 97 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆகமொத்தம் 1,450 மீட்டர் நீளத்திற்கு மொத்தம் ரூ.33 கோடியே 95 இலட்சம் மதிப்பிலான பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகள் யாவும் இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.*

திரு. சு. பவுன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரியின் உரிமையை மீட்டுத் தந்த பொன்னியின் செல்வியே, (மேசையைத் தட்டும் ஒலி) கச்சத் தீவை மீட்கப்போகும் நாளைய பாரதமே, (மேசையைத் தட்டும் ஒலி) மீனவ சமுதாயத்தைக் காக்கும் குலவிளக்கே, ஏழை மக்களின் அமுதசுரபியே, புகழ் ஓங்கும் இமயமே, எங்கள் இதய தெய்வமே, உங்களை வணங்குகிறேன் தாயே!*

பூம்புகார் தொகுதியில் 10 மீனவக் கிராமங்கள் உள்ளன. இங்கு கடலரிப்பு ஏற்பட்டு மீனவ குடியிருப்புகளுக்குள் உப்பு நீர் உள்புகும் சூழல் உள்ளது. எனவே, கடலரிப்பிலிருந்து மீனவக் கிராமங்களைப் பாதுகாக்க தடுப்புச் சுவர் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டு இறுதிக்குள் பணிகள் முடிவுறும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.*

திரு. சு. பவுன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வானகிரி கிராமத்தில் ரூ.34 கோடி செலவில் கடலரிப்பைத் தடுப்பதற்குத் தடுப்புச் சுவர் அமைக்கும் பணிக்கு ஆணைகளைப் பிறப்பித்து, பணிகள் துவங்கப்பட்டு, நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10—45

என்னுடைய தொகுதிக்குட்பட்ட காலமநல்லூர் ஊராட்சிக்கு உள்ளடங்கிய சின்னமேடு என்கின்ற மீனவக் கிராமத்திலே சுமார் 800 மீட்டர் நீளத்திற்கு கடலரிப்பு ஏற்பட்டு, கடல் நீர் கிராமத்தில் உட்புகும் சூழ்நிலை உள்ளது. கருணை உள்ளத்தோடு அனைத்து பகுதிகளுக்கும் வாரி வழங்கிக் கொண்டிருக்கின்ற, மீனவ சமுதாயத்தின் விடிவெள்ளியாக இருக்கின்ற எங்கள் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை எடுத்துச்சென்று, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கடலரிப்பைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 329, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

329—

கால்நடைக் கிளை நிலையம்

***5284—திரு. எல். வெங்கடேசன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—